# கணிப்பீடு, மதிப்பாய்வு, மற்றும் அறிக்கையளித்தல் மூலம் உங்கள் பிள்ளையின் கற்றலிற்கு ஆதரவளித்தல்

## கணிப்பீடு மற்றும் மதிப்பாய்வின் நோக்கம் மாணவ கற்றலை மேம்படுத்துவதாகும்





## ஒன்டேரியோ (Ontario) மாணவர்கள் 2010-11 பாடசாலை வருடம் தொடக்கம் புதிய, மேம்படுத்தப்பட்ட தேர்ச்சி அறிக்கைகளை இல்லத்திற்கு எடுத்துவருவர். இந்த மாற்றங்கள், மாணவ சாதனையின் கணிப்பீடு, மதிப்பாய்வு, மற்றும் அறிக்கையளித்தல் ஆகியவற்றைக் குறித்த அரசாங்கத்தின் *Growing Success* (வெற்றியை வளர்த்தல்) எனப்பட்ட புதிப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

### பெற்றார் என்ற முறையில் நான் என்ன பங்கு வகிக்கின்றேன்?

பெற்றார் அல்லது பாதுகாவலர் என்ற முறையில், உங்கள் பிள்ளையின் கல்வியில் நீங்கள் இன்றியமையாத பங்குதாரர்கள் என்பதையும், அவர்களின் பெற்றார்கள் ஈடுபட்டிருக்கும்பொழுது பிள்ளைகள் பாடசாலையில் மிக நன்றாக செயற்படுவர் என்பதையும் நாம் அறிகின்றோம்.

உங்கள் பிள்ளை பாடசாலையில் எவ்வாறு செயற்படுகின்றார் என்பதைக் குறித்த தெளிவான, அர்த்தமுடைய, மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்கள் உங்களிற்கு தேவைப்படுகின்றன என்பதை நாம் அறிகின்றோம். பாடசாலை வருடம் பூராகவும் சீரான முறைப்படி உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடமிருந்து அறியவிரும்புவதை நாம் அறிகின்றோம். இவ்வொப்பந்தம் - அதன் புதிய தேர்ச்சி அறிக்கைகளுடன் - இதை நடைபெறச்செய்ய உதவும்.

### ஆரம்பநிலை மாணவர்களிற்கு வித்தியாசமாகவிருப்பது என்ன?

இந்த பாடசாலை வருடம் தொடக்கம், தரங்கள் 1 முதல் 8 இலுள்ள ஆரம்பநிலை மாணவர்கள் ஒரு புதிய இலையுதிர்க்கால தேர்ச்சி பத்திரத்தையும், குளிர்க்காலத்தில் மற்றும் பாடசாலை வருட இறுதியில் ஒவ்வொன்று எனும் முறையில் இரண்டு திருத்தியமைக்கப்பட்ட மாகாண தேர்ச்சி பத்திரங்களையும் இல்லத்திற்கு எடுத்துவருவர்.

புதிய <u>இலையுதிர்க்கால தேர்ச்சி பத்திரம்</u> ஆனது:

- உங்களிற்கும் உங்கள் பிள்ளையின் ஆசிரியரிற்குமிடையே முந்திய, அத்துடன் தொடர்ச்சியாகவிருக்கும் தொடர்பாடலை ஊக்குவிக்கின்றது
- வெற்றியிற்கு அத்தியாவசியமென நாமறியும் கற்றல் திறன்களையும் வேலை பழக்கங்களையும் உங்கள் பிள்ளை எவ்வளவு நன்றாக விருத்திசெய்கின்றார் என்பதை உங்களிற்கு தெரிவிக்கின்றது
- கணிதம், சமூகக்கல்வி, விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்பம் போன்ற அனைத்து அறிவுசார்ந்த பாடங்களையும் பற்றி தொடர்ந்து அறிவிக்கின்றது – ஆனால் ஒரு தரம் அல்லது மதிப்பெண்ணை வழங்காது, உங்கள் பிள்ளை எவ்வளவு நன்றாக முன்னேறுகின்றார் என்று தெரிவிக்கும்: "மிக நன்றாக", "நன்றாக", அல்லது "சிரமத்துடன்"
- மதிப்பாய்வுகள் பூர்த்திசெய்யப்படமுன்பு விருத்திசெய்யப்பட வேண்டிய பகுதிகளையும் வலிமைகளையும் கவனத்திற்கு கொண்டுவருகின்றது
- உங்கள் பிள்ளையின் ஆசிரியரிமிருந்து தனிப்பட்டதான, தெளிவான அத்துடன் அர்த்தமுள்ள குறிப்புகளை உள்ளடக்கின்றது.

மேம்படுத்தப்பட்ட ஆரம்பநிலை மாகாண தேர்ச்சி பத்திரம் ஆனது:

- அவசியமான கற்றல் திறன்கள் மற்றும் வேலை பழக்கங்கள் பற்றி உதாரணங்களை வழங்கி அவற்றை வலியுறுத்துகின்றது
- உங்கள் பிள்ளை எவ்வாறு முன்னேறுகின்றார் என்பதை நீங்கள் புரிந்துகொள்வதற்காக, அர்த்தமுள்ள, தெளிவான அத்துடன் தனிப்பட்டதான குறிப்புகளை ஆசிரியர்கள் உள்ளடக்குவதற்கு தாராளமான இடைவெளியைக் கொண்டுள்ளது
- உங்கள் பிள்ளை எவ்வளவு நன்றாக செயற்படுகின்றார் என்பதை நீங்கள் தெளிவாக புரியும்பொருட்டு, தரங்கள் 1-6 இற்கு எழுத்து மதிப்புகளையும் தரங்கள் 7-8 இற்கு சதவிகித மதிப்பெண்களையும் உபயோகிக்கின்றது
- இல்லத்தில் உங்கள் பிள்ளையின் கற்றலிற்கு நீங்கள் ஆதரவளிக்க குறிப்புகளை வழங்குகின்றது.

## இந்த ஆரம்பநிலை மாகாண தேர்ச்சி பத்திரங்களை எப்பொழுது எனது பிள்ளை இல்லத்திற்கு எடுத்து வருவார்?

ஆரம்பநிலை தரங்களிற்கு முறைப்படியான அத்துடன் அத்தியாவசியமான மூன்று அறிக்கை காலவரைகள் உள்ளன.

1. புதிய இலையுதிர்க்கால தேர்ச்சி பத்திரம் ஐப்பசி 20 இற்கும் கார்த்திகை 20 இற்குமிடையே வழங்கப்படும்.
2. முதலாவது மாகாண தேர்ச்சி பத்திரம் தை 20 இற்கும் மாசி 20 இற்குமிடையே வழங்கப்படும்.
3. இரண்டாவது மாகாண தேர்ச்சி பத்திரம் பாடசாலை வருட இறுதியில் வழங்கப்படும்.

குறிப்பான திகதிகள் தனிப்பட்ட பாடசாலை மன்றங்களால் நியமிக்கப்படுகின்றன.

## உயர்நிலை மாகாண தேர்ச்சி பத்திரங்கள் மாற்றமடைந்துள்ளனவா?

ஆம். உயர்நிலை மாகாண தேர்ச்சி பத்திரங்களிற்கான விருத்திகள் பின்வருவனவற்றை உள்ளடக்கின்றன:

- கூடிய முக்கியத்துவம், அவசியமான கற்றல் திறன்கள் மற்றும் வேலை பழக்கங்கள் பற்றிய உதாரணங்களுடன் (உள்ளடக்கத்தை பார்க்கவும்)
- சாதனைகளின் வெவ்வேறு தரங்களைப் பற்றிய மேலதிக தகவல்களும், இது எவ்வாறு சதவிகித மதிப்பெண்களிற்கு பொருந்துகின்றது என்பதும்
- தனிப்பட்ட, தெளிவான அத்துடன் அர்த்தமுள்ள ஆசிரிய குறிப்புகள்.

அத்தியாவசியமான கற்றல் திறன்கள் மற்றும் வேலை பழக்கங்கள் இப்பொழுது, தரங்கள் 1 முதல் 12 ஊடாக அனைத்து ஒன்டாரியோ தேர்ச்சி பத்திரங்களிலும் வலியுறுத்தப்படுகின்ற ஆறு கற்றல் திறன்களும் வேலை பழக்கங்களும் உள்ளன:

- பொறுப்பு
- ஒழுக்கவமைப்பு
- சுதந்திர வேலை
- உடனுழைப்பு
- முனைப்பு
- சுய சீர்ப்பாடு

Ontario Ministry of Education

# Elementary Progress Report Card

[Board logo]

**Date:**

| Student: | | OEN: | Days Absent: | Total Days Absent: |
|---|---|---|---|---|
| Grade: | Teacher: | | Times Late: | Total Times Late: |

| Board: | School: | |
|---|---|---|
| Address: | Address: | |
| | Principal: | Telephone: |

[Space for Board Information]

1

ஒவ்வொரு பாடசாலை மன்றமும் தங்கள் சொந்த உபயோகிப்பிற்கு தனிப்பயனாக்கக்கூடிய திறந்த இடைவெளி. மன்றத்தின் நோக்கக்கூற்று, குறிக்கோள் அல்லது கல்வி இலக்குகள் போன்றவை உள்ளடக்கப்படக்கூடிய தகவல்களின் வகைகள் ஆகும்.

**Learning Skills and Work Habits**

E – Excellent G – Good S – Satisfactory N – Needs Improvement

**Responsibility**
- Fulfils responsibilities and commitments within the learning environment.
- Completes and submits class work, homework, and assignments according to agreed-upon timelines.
- Takes responsibility for and manages own behaviour.

**Organization**
- Devises and follows a plan and process for completing work and tasks.
- Establishes priorities and manages time to complete tasks and achieve goals.
- Identifies, gathers, evaluates, and uses information, technology, and resources to complete tasks.

**Independent Work**
- Independently monitors, assesses, and revises plans to complete tasks and meet goals.
- Uses class time appropriately to complete tasks.
- Follows instructions with minimal supervision.

**Collaboration**
- Accepts various roles and an equitable share of work in a group.
- Responds positively to the ideas, opinions, values, and traditions of others.
- Builds healthy peer-to-peer relationships in person and through personal and media-assisted interactions.
- Works with others to resolve conflicts and build consensus to achieve group goals.
- Shares information, resources, and expertise, and promotes critical thinking to solve problems and make decisions.

**Initiative**
- Looks for and acts on new ideas and opportunities for learning.
- Demonstrates the capacity for innovation and a willingness to take risks.
- Demonstrates curiosity and interest in learning.
- Approaches new tasks with a positive attitude.
- Recognizes and advocates appropriately for the rights of self and others.

**Self-Regulation**
- Sets own individual goals and monitors progress towards achieving them.
- Seeks clarification or assistance when needed.
- Assesses and reflects critically on own strengths, needs, and interests.
- Identifies learning opportunities, choices, and strategies to meet personal needs and achieve goals.
- Perseveres and makes an effort when responding to challenges.

**Strengths/Next Steps for Improvement**

3

பலங்கள்/முன்னேற்றத்திற்கான அடுத்த படிகள்: ஆறு கற்றல் திறன்கள் மற்றும் வேலை பழக்கங்களில் ஒரு மாணவரின் விருத்தியை ஆராயும் தனிப்பட்ட, புரிவதற்கு இலகுவான குறிப்புகளை ஆசிரியர்கள் உள்ளடக்குவர்.

83-0465E (2010/01) © Queen's Printer for Ontario, 2010 **Grades 1–6** Page 1 of 2

2

ஆறு கற்றல் திறன்கள் மற்றும் வேலை பழக்கங்களில் மாணவ விருத்தியை அறிக்கைச்செய்வதற்கு ஆசிரியர்கள் ஒரு எழுத்து குறியீட்டை உள்ளடக்கும் நிரல்:

E - excellent (மிகச்சிறந்தது)

G - good (நன்று)

S - satisfactory (திருப்திகரமானது)

N - needs improvement (முன்னேற்றம் அவசியமானது)

Student: OEN: Grade:

**ESL/ELD**– Achievement is based on expectations modified from the curriculum expectations for the grade to support English language learning needs. **IEP**– Individual Education Plan **NA** – No instruction for subject/strand

| Subjects | Progressing With Difficulty | Progressing Well | Progressing Very Well | Strengths/Next Steps for Improvement |
|---|---|---|---|---|
| **Language** Reading, Writing, Oral Communication, Media Literacy ☐ ESL/ELD ☐ IEP ☐ NA | | | | |
| **French** ☐ ESL/ELD ☐ IEP ☐ NA ☐ Core ☐ Immersion ☐ Extended | | | | |
| **Native Language** ☐ ESL/ELD ☐ IEP ☐ NA | | | | |
| **Mathematics** ☐ ESL/ELD ☐ IEP ☐ French | | | | |
| **Science and Technology** ☐ ESL/ELD ☐ IEP ☐ French | | | | |
| **Social Studies** ☐ ESL/ELD ☐ IEP ☐ French | | | | |
| Health and Physical Education: **Health Education** ☐ ESL/ELD ☐ IEP ☐ French | | | | |
| Health and Physical Education: **Physical Education** ☐ ESL/ELD ☐ IEP ☐ French | | | | |
| The Arts: **Dance** ☐ ESL/ELD ☐ IEP ☐ French ☐ NA | | | | |
| The Arts: **Drama** ☐ ESL/ELD ☐ IEP ☐ French ☐ NA | | | | |
| The Arts: **Music** ☐ ESL/ELD ☐ IEP ☐ French ☐ NA | | | | |
| The Arts: **Visual Arts** ☐ ESL/ELD ☐ IEP ☐ French ☐ NA | | | | |
| ☐ ESL/ELD ☐ IEP ☐ French ☐ NA | | | | |

5

பலங்கள்/முன்னேற்றத்திற்கான அடுத்த படிகள்: ஒரு மாணவர் தற்போதைய சமயம் வரை பாடங்களின் பாடத்திட்ட எதிர்ப்பார்ப்புகளை எவ்வாறு சந்திக்கின்றார், குறிப்பிடத்தக்க பலங்களை அடையாளங்காட்டல், சிரமத்திற்குரிய பகுதிகள் மற்றும் முன்னேற்றத்திற்கான அடுத்த படிகள் என்பனவற்றைப்பற்றிய ஆசிரியர் குறிப்பு.

**To Parents/Guardians and Students:** This copy of the progress report card should be retained for reference. The original or an exact copy has been placed in the student's Ontario Student Record (OSR) folder and will be retained for five years after the student leaves school.

Teacher's Signature X Principal's Signature X

*[Space Designated for Board]*

6

ஒவ்வொரு பாடசாலை மன்றமும் தங்கள் சொந்த உபயோகிப்பிற்கு தனிப்பயனாக்கக்கூடிய திறந்த இடைவெளி. தகவல்கள்/உபயோகங்களின் உதாரணங்களில் உள்ளடங்குபவை: மேலதிக குறிப்புகள் வழங்குதல், மாணவ அல்லது பெற்றார் நேர்காணலிற்கு கோரிக்கையளித்தல், அடுத்த படிகளை வரையறுத்தல், பாடசாலை செயற்பாடுகளைப்பற்றி தகவல்களை பகிர்தல் போன்றவை.

83-0465E (2010/01) © Queen's Printer for Ontario, 2010 **Grades 1–6** Page 2 of 2

4

ஒரு குறிப்பிட்ட பாடத்தில், உதாரணமாக கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, மொழி, சுகாதாரம் மற்றும் உடற்கல்வி போன்றவற்றில் ஒரு மாணவர் முன்னேறும் விதத்தைப்பற்றி, அதாவது, "சிரமத்துடன்", "நன்றாக", அல்லது "மிக நன்றாக", என அறிக்கையளிக்க ஆசிரியர்கள் இப்பெட்டிகளில் ஒன்றை குறிக்கும் நிரல்கள்.

## உயர்நிலை மாணவர்கள் எப்பொழுது மாகாண தேர்ச்சி பத்திரங்களை இல்லத்திற்கு எடுத்து வருவர்?

கடந்தகாலத்தைப் போலவே, தவணைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தேர்ச்சி பத்திரங்களை ஒரு தவணைக்கு இரண்டு முறை இல்லத்திற்கு அனுப்பும். தவணைப்படுத்தப்படாத பாடசாலைகள் ஒரு வருடத்திற்கு மூன்று முறை தேர்ச்சி பத்திரங்களை வழங்கும்.

குறிப்பான திகதிகள் தனிப்பட்ட பாடசாலை மன்றங்களால் நியமிக்கப்படுகின்றன.

## ஆசிரியர்களின் குறிப்புகள் புரிந்துகொள்ள இலகுவாகவிருக்குமா?

ஆம். ஆசிரியர்களிற்கு, உங்கள் பிள்ளை அறிந்திருப்பதையும் செய்யக்கூடியவற்றையும் பற்றிய குறிப்புகளை உள்ளடக்குவதற்கென, அனைத்து புதிய தேர்ச்சி பத்திரங்களும் இப்பொழுது பரந்த இடைவெளிகளை கொண்டுள்ளன. வலிமைகள் மற்றும் முன்னேற்றத்திற்குரிய அடுத்த படிகளை விவரிக்கவும், அத்துடன் அவர்களின் சொந்த அவதானிப்புகளையும் கருத்துகளையும் உள்ளடக்கவும் இந்த இடைவெளியை அவர்கள் உபயோகிக்கலாம்.

## மற்றைய வேளைகளில் நான் என் பிள்ளையின் ஆசிரியரிடமிருந்து அறியப்பெறுவேனா?

பாடசாலை வருடம் பூராகவும் நீங்கள் ஒழுங்கான முறையில் உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடமிருந்து அறியவேண்டும். தேர்ச்சி அறிக்கைகளைத் தவிர, பெற்றார்-ஆசிரியர் அல்லது பெற்றார்-மாணவர்-ஆசிரியர் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், தொலைபேசி அழைப்புகள், சரிபார்க்கும் பட்டியல்கள் மற்றும் முறைசாரா அறிக்கைகள் போன்ற மற்றைய தொடர்பாடல் முறைகள் உள்ளடங்குகின்றன.

## எனது பிள்ளையின் மதிப்பெண்களை எவ்வாறு ஆசிரியர்கள் கணிக்கின்றனர்?

உங்கள் பிள்ளை பாடத்திட்டத்தை கற்கின்றார் என்பதற்கு ஆதாரமாக, அப்பியாசப்பயிற்சிகள், வகுப்பறை பரீட்சைகள், பரீட்சைகள், செயல்முறை விளக்கங்கள், மற்றும் திட்டச்செயல்கள் என்பனவற்றை ஆசிரியர்கள் கவனிக்கின்றனர்.

இந்த கற்றல், பொருண்மைகளை தனியே தெரிந்திருப்பதைவிட மேலான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. கற்றவற்றை வெளிப்படுத்தி செயற்படுத்துவதன் மூலம் அவர்கள் கற்கின்றதைப்பற்றி ஒரு விளக்கத்தை கொண்டுள்ளதாக மாணவர்கள் காண்பித்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் நுணுக்க யோசனை மற்றும் பிரச்சினைத்தீர்வு திறன்களையும் காண்பித்தல் வேண்டும்.

ஒரு கற்றல் அலகு, காலப்பிரிவு அல்லது தவணையின் இறுதியிலுள்ள செயற்பாடுகளின் தரத்திற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு, அனைத்து செயற்பாடுகளும் மீளாய்வு செய்யப்படுகின்றன. ஆசிரியர்கள் சராசரிகளை மட்டும் கணிப்பதில்லை. இறுதி மதிப்பெண்ணைப்பற்றி ஒரு தீர்மானத்தை எடுக்கமுன்பு, இயலுமானளவு தகவல்களை சேகரிக்கும்பொருட்டு, பரீட்சைகளையும் அப்பியாசப்பயிற்சிகளையும் கவனிப்பதுடன், உங்கள் பிள்ளையுடன் உரையாடி அவரை வகுப்பறையில் அவதானிக்கின்றனர்.

## வீட்டுபயிற்சி எதற்காக உபயோகிக்கப்படுகின்றது?

தொடர்கின்ற வீட்டுபயிற்சியானது, கற்றல் மற்றும் ஒழுங்கமைப்பு திறன்களை விருத்திசெய்யவும், அறிவை ஒன்றுதிரட்டவும், அடுத்த வகுப்பிற்கு தயாராகவும் உபயோகிக்கப்படுகின்றது. அத்துடன், மாகாண தேர்ச்சி பத்திரத்தில் பிரதிபலிக்கப்படுகின்ற பலமான கற்றல் திறன்களையும் வேலை பழக்கங்களையும் விருத்திசெய்ய உதவுகின்றது.

## தரங்கள் 1 முதல் 8 இல் எனது பிள்ளையின் மாகாண தேர்ச்சி பத்திரத்தில் “R” என்பதின் அர்த்தம் என்ன?

ஒரு “R” என்பது விசாலமான திருத்தப்பாடு தேவைப்படுகின்றது என்ற அர்த்தத்தைக் கொண்டதாகும். இதற்கான காரணம் அப்பாடத்தின் அவசியமான திறன்களும் அறிவும் சந்திக்கப்படாததாலாகும். உங்கள் பிள்ளை அவசியமான திறன்களையும் அறிவையும் பெறுவதற்கு அவரிற்கு ஆதரவளிக்கவுதவும் உத்திகளை விருத்திசெய்வதற்கு உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் சேர்ந்துழைப்பது முக்கியமாகும்.

## தரங்கள் 1 முதல் 10 இல் எனது பிள்ளையின் மாகாண தேர்ச்சி பத்திரத்தில் “I” என்பதின் அர்த்தம் என்ன?

ஒரு “I” என்பது ஒரு தரம் அல்லது மதிப்பெண்ணை வழங்குவதற்கு போதியளவு தகவல்களை அவ்வாசிரியர் கொண்டிருக்கவில்லை என்ற அர்த்தத்தைக் கொண்டதாகும். உதாரணமாக, உங்கள் பிள்ளை அண்மையில் பாடசாலைகளை மாற்றியிருப்பின் அல்லது ஒரு நீடித்த சுகவீனத்திற்கு உட்பட்டிருப்பின் இது நேரிடக்கூடும்.

## ஏமாற்றல் அல்லது பிறரின் எண்ணங்களை திருடுதலிற்கு பின்விளைவுகள் உள்ளனவா?

ஆம். புதுப்பிக்கப்பட்ட மதிப்பாய்வு ஒப்பந்தம், மாணவர்கள் தம் சொந்த செயற்பாடுகளிற்கு பொறுப்புடையவர்கள் என்பதை தெளிவாக்கின்றது. ஏமாற்றல், பிறரின் எண்ணங்களை திருடுதல், மற்றும் செயற்பாடுகளை பூர்த்திசெய்ய தவறுதல் ஆகியவற்றிற்கு, பூச்சியத்தை மதிப்பெண்ணாக பெறுவதை உள்ளடக்கக்கூடிய பின்விளைவுகள் காணப்படும். உங்கள் பாடசாலை மன்றத்திடம் அவர்களின் ஏமாற்றல் அல்லது பிறரின் எண்ணங்களை திருடுதல் சம்பந்தப்பட்ட கோட்பாட்டினைப்பற்றி வினவுங்கள்.

## செயற்பாடுகள் பூர்த்திசெய்யாதல் அல்லது செயற்பாடுகளை தாமதமாக சமர்ப்பித்தலிற்கு பின்விளைவுகள் உள்ளனவா?

அவரின் ஆசிரியரால் அனுமதிக்கப்பட்ட காலவரம்பிற்குள் அவன் அல்லது அவள் கற்றுள்ளதை அல்லது சாதித்திருப்பதை காண்பிப்பதன் பொறுப்பை உங்கள் பிள்ளை கொண்டுள்ளார்.

தாமதமான மற்றும் தவரவிடப்பட்ட அப்பியாசப்பயிற்சிகளை தவிர்க்கவும் கையாளவும் ஆசிரியர்கள் உபயோகிக்கக்கூடிய பல உத்திகளை ஒன்டேரியோவின் (Ontario's) கோட்பாடு பட்டியல்படுத்தியுள்ளது. சமவயதினரால் பயிற்சிவழங்கல் மற்றும் நேர-நிர்வாக பாடங்கள் முதல் பிரதான அப்பியாசப்பயிற்சிகளிற்கு பாடசாலை-பூரான திட்டமிடுதல் வரை தெரிவுகள் காணப்படலாம்.

அனைத்து தரங்களிலும், உங்கள் பிள்ளை தொடர்ந்து அப்பியாசப்பயிற்சிகளை தவரவிட்டால் அல்லது செயற்பாடுகளை தாமதமாக சமர்ப்பித்தால், இது, தேர்ச்சி பத்திரத்தின் கற்றல் திறன்கள் மற்றும் வேலை பழக்கங்கள் *(Learning Skills and Work Habits)* பகுதியில் பிரதிபலிக்கப்படக்கூடும். தரங்கள் 7 முதல் 12 மாணவர்களிற்கு மதிப்பெண்கள் கழிக்கப்படக்கூடும்.

உங்கள் பாடசாலையிடம் அவர்களின் தாமதமான அல்லது தவரவிடப்பட்ட அப்பியாசப்பயிற்சிகள் சம்பந்தப்பட்ட கோட்பாட்டினைப்பற்றி வினவுங்கள்.

## ஒன்டேரியோவின் (Ontario's) கல்வி தராதரங்கள் மாற்றமடைந்துள்ளனவா?

இல்லை. ஒன்டேரியோ (Ontario) பாடத்திட்டமானது, அனைத்து பாடங்களிலும் பாடக்கோப்புகளிலும் மாணவர்கள் தெரிந்திருக்கவேண்டிய அத்துடன் செய்யக்கூடியதென எதிர்ப்பார்க்கப்படுகின்றவற்றை தெளிவாக காண்பிக்கின்றது. ஒவ்வொரு மாணவரும் மாகாணத்தின் அதே உயர்வான தரங்களிற்கெதிரே கணிப்பிடப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படுகின்றனர்.

## கற்றல் திறன்களிற்கும் வேலை பழக்கங்களிற்கும் ஏன் கூடிய முக்கியத்துவமும் வலியுறுத்தலும் கொடுக்கப்படுகின்றது?

உயர்நிலையிற்கு பின்பான கல்வியிலும் உத்தியோக உலகிலும் வெற்றிபெற விரும்பின், மாணவர்கள் தனியே பொருண்மைகளை விட அதிகமானவற்றை கற்பது அவசியம் என்பதை ஆராய்ச்சி காண்பிக்கின்றது.

புது முயற்சிகள் எடுக்கவும், சுயாதீனமாக செயற்படவும், தற்சார்புணர்ச்சி கொள்ளவும், ஒரு குழுவில் செயற்படவும் ஒன்டேரியோவின் (Ontario's) மாணவர்கள் கற்கின்றனர். புதிய அறிவு பொருளாதாரத்தில், உத்தியோகங்களிற்கும் வளர்ச்சியிற்குமுரிய ஒவ்வொரு வாய்ப்பையும் கைப்பற்றுவதற்குரிய ஆற்றலை உங்கள் பிள்ளையிற்கு வழங்கும் நோக்குடன், நுணுக்க யோசனை மற்றும் பிரச்சினைத்தீர்வு திறன்களை பாடசாலைகள் கற்பிக்கின்றன.

## அரசாங்கம் ஏன் ஒரு புதிய கணிப்பீடு, மதிப்பாய்வு, மற்றும் அறிக்கையளித்தல் ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்தியது?

கணிப்பீடு, மதிப்பாய்வு, மற்றும் அறிக்கையளித்தலின் குறிக்கோளானது, மாணவ கற்றலை மேம்படுத்துவதாகும். புதிய அணுகுமுறைகள், மாணவர்களிற்கு நலனளிக்கும் புதிய சவால்களையும் புதிய வாய்ப்புகளையும் பயிற்றுநர்களிற்கு அளிக்கின்றன. இந்த புதிய அறிவை பிரதிபலித்துகொண்டு, *Growing Success* (வெற்றியை வளர்த்தல்) ஆனது, தகவல்களை திரட்டி அவற்றை பெற்றோருடனும் மாணவர்களுடனும் பகிர்வதற்கு ஆசிரியர்கள் உபயோகிக்கும் மிகச்சிறந்த செய்முறைகளையும் உத்திகளையும் புதுப்பித்து தெளிவுபடுத்துகின்றது.

### அடிப்படை கோட்பாடுகள்

ஒன்டேரியோவின் (Ontario's) ஆசிரியர்கள் பின்வரும் கூறுகளை உள்ளடக்கும் கணிப்பீடு மற்றும் மதிப்பாய்வு செய்முறைகளை உபயோகிக்கின்றனர்:

- நியாயமான, வெளிப்படையான அத்துடன் சமத்துவமானவை
- அனைத்து மாணவர்களையும் ஆதரிக்கின்றன
- கவனத்துடன் திட்டமிடப்பட்டுள்ளன
- பாடசாலை வருட ஆரம்பத்தில் மாணவர்களிற்கும் பெற்றோர்களிற்கும் தெளிவாக விளக்கப்படுகின்றன
- தொடர்வாகவும் பல்வகைப்பட்டதாகவும் இருப்பதுடன், மாணவர்கள் அவர்களின் கற்றலை காண்பிப்பதற்கு பன்மடங்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.
- தெளிவான, அர்த்தமுள்ள மற்றும் உரியகாலத்திலான மீள்கருத்தை உள்ளடக்குகின்றன
- மாணவர்களை சுயாதீன கற்றுநர்கள் ஆகுவதற்கு உதவுகின்றன.

மேலதிக தகவல்களிற்கும், *Growing Success* (வெற்றியை வளர்த்தல்) இனை முழுமையாக பார்வையிடவும், கல்வி அமைச்சின் (Ministry of Education) இணையதளத்தை இங்கு சந்தியுங்கள்: ontario.ca/EDUparents.

Printed on recycled paper • ISBN 978-1-4435-4337-8 (Print) • ISBN 978-1-4435-4338-5 (PDF) • © Queen's Printer for Ontario, 2010